# உலக நாடுகளின் வளர்ச்சியை விவாதித்தது டாவோஸ் மாநாடு

## விவரிக்கிறார் தோகா வங்கி சிஇஓ சீதாராமன்

**தோகா:** அமெரிக்கா வரி சீரமைப்பு அறிவித்த பிறகு உலக நாடுகளின் பொருளாதார வளர்ச்சி 3.7 சதவீதம் ஆக உயரும் என்று சர்வதேச நிதியம் (ஐஎம்எப்) தனது புதிய கணிப்பை டாவோசில் வெளியிட்டுள்ளது. இந்த வளர்ச்சியில் கத்தாரும் கணிசமாக பயன்பெறும் என்று தோகா வங்கி சிஇஓ சீதாராமன் தெரிவித்தார்.

சுவிட்சர்லாந்தில் டாவோசில் நடந்த உலக பொருளாதார அமைப்பின் 48வது ஆண்டு மாநாட்டில் கலந்து கொண்ட அவர், மாநாட்டில் பேசப்பட்டவை குறித்து வெளியிட்ட செய்திக்குறிப்பு:

கடந்த 10 ஆண்டுகளாக நீடித்த உற்பத்தி தேக்கநிலைக்குப் பிறகு, 4வது தொழில் புரட்சி மூலம், 2025ம் ஆண்டில் 3.7 டிரில்லியன் டாலர் அளவுக்கு வர்த்தகம் உயரும் என்பதே டாவோஸ் மாநாட்டில் விவாதிக்கப்பட்ட முக்கிய விஷயமாக இருந்தது.

இணையம் சார்ந்த கருவிகள், எந்திரங்கள், செயற்கை அறிவு, கூட்டு உற்பத்தி ஆகிய நடைமுறைகளால் மொத்த உற்பத்தி அதிகரித்து வருகிறது. இருப்பினும், இவற்றில் எதிர்நோக்கும் பொருளாதார இலக்கை எட்டுவதற்கு, இந்த நவீன தொழில்நுட்பத்தை மிகச் சரியான முறையில் பயன்படுத்த வேண்டும். அதற்கான கொள்கைகளை நாடுகள் வகுத்துக் கொள்ள வேண்டும் என்று இந்த மாநாட்டில் வலியுறுத்தப்பட்டது. இப்போது பயன்பாட்டில் பெருகி வரும் கிரைட்டோ கரன்சி குறித்தும் விவாதிக்கப்பட்டது.

உலக வர்த்தக ஒப்பந்தத்துக்கு மாறாக , சில நாடுகள் தங்கள் நாட்டுக்கு முக்கியத்துவம் தரும் தற்காப்புவாதம் ஏற்படுத்தி வரும் வர்த்தக பாதிப்புகள் குறித்து ஒவ்வொரு நாடும் பேசின. குறிப்பாக இந்த விவகாரத்தை இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி வலியுறுத்திப் பேசினார். அதற்கு பதில் அளிக்கும் வகையில் பேசிய அமெரிக்க அதிபர் டிரம்ப், ''அமெரிக்கா முதலில் என்றால், அமெரிக்கா மட்டுமே என்று அர்த்தமில்லை. நாங்கள் தரும் சலுகைக்கு கைமாறாக மற்ற நாடுகளும் சலுகைகள் தரும் நியாயமான வர்த்தகத்தையே வலியுறுத்துகிறேன்'' என்று கூறியுள்ளார்.




டாவோஸ் உலக பொருளாதார மாநாடு குறித்து தோகா வங்கி சிஇஓ சீதாராமன் விவரிக்கிறார்.

கத்தார் துணைப் பிரதமரும் வெளியுறவு அமைச்சருமான ஷேக் முகம்மது பின் அப்துல்ரகுமான் அல்தானி, கத்தார் வர்த்தக நிலைப்பாட்டை தெளிவுபடுத்தினார்.

கத்தார் பட்ஜெட்டின் 41 சதவீத செலவினம் மருத்துவம், கல்வி, உள்கட்டமைப்புக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. இது மற்ற நாடுகளுக்கான தொழில்வாய்ப்பு. அரசு–தனியார்–பங்கேற்பு (பிபிபி) முறை கத்தாரில் அனுமதிக்கப்பட்டுள்ளதும் புதிய தொழில் வாய்ப்புகளை வெளிநாட்டு நிறுவனங்களுக்கு வழங்கும்.

டாவோஸ் மாநாட்டில் 80 நாடுகள் பங்குகொண்டன. அவற்றின் வளர்ச்சிக்கான திட்டம் வகுப்பதில் இந்த மாநாடு முக்கிய பங்கு வகிக்கும். இவ்வாறு சீதாராமன் கூறியுள்ளார்.